# முகவுரை

தொழில் திணைக்களத்தின் 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். உரிய காலப்பகுதியில் தொழிற்றுறை அமைதியைப் பேணுகின்ற செய்முறையில் மாவட்ட நிருவாகப் பொறிமுறையைப் பலப்படுத்துவதில் விசேட கவனம் திருப்பப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் மட்டுமே இதுவரை நடத்தப்பட்ட தொழில் பரிசோதனையின் தரத்தை உயர்த்தக்கூடியதான பெறுபேற்றினை வழங்கியிருந்த தொழிற்பாட்டு செயற்பாடுகளின் முன்னேற்றம் பிரேதேச மட்டத்திற்குப் பரவலாக்கப்பட்டது.

இவ்வாண்டுச் காலப்பகுதியில், 25,071 உழைப்பு மணித்தியாலங்கள் இழப்பினை விளைவாக்கியிருந்த தோட்டத்துறையில் 09 வேலை நிறுத்தங்களும், ஏனைய தாபனங்களில் 06 வேலை நிறுத்தங்களும் இடம்பெற்றிருந்தன. எனினும், இந்த காலப்பகுதியில் நாட்டில் வேலை நிறுத்தம் குறைவடைந்த போக்கே காணப்பட்டது. இந்த சுமூகமான நிலைமை, தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் தொடர்புகள் பிரிவினால் நாடளாவியரீதியில் தொழிற்றுறை மட்டத்தில் நடத்தப்பட்ட சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அடைய முடிந்திருந்தது.

அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமொன்றினால் அரச துறையில் வேதனங்களை அதிகரிப்பதற்கு ஒத்ததாக தொழிற்பாட்டிலுள்ள 39 சம்பளச் சபைகளின் கூட்டங்களை நடத்தி, 18% - 45% இற்கிடையிலான அதிகரிப்பு கொண்டுவரப்பட்டது. நாட்டில் விரைவான அபிவிருத்திச் செயல்முறையிலுள்ள கட்டிடத் துறையிலுள்ள பணியாளர்கள் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீது விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பீ + சலுகை மற்றும் குறித்த சந்தைக் காரணிகளுக்கு மத்தியிலும்கூட பொருளாதாரத்தில் சக்திமிகுந்ததாக இருக்கின்ற தொழில்படைக்கு ஏற்பட்ட பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கு தொழில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த அதிகாரிகள் மூலமான சாதகமான பங்களிப்பு அவர்களின் அர்ப்பணிப்பின் விளைவிலாகும்.

இந்த வெற்றியை அடைவதற்கு வழிகாட்டலை வழங்கியிருந்த தொழில், தொழில் உறவுகள் அமைச்சிற்கு எனது நன்றிகளையும் மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கை முகவரினால் மேற்கொள்ளப்பட்ட கிரமமான பங்களிப்பிற்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொழில் திணைக்களம்
தொழிற் செயலகம்
கொழும்பு - 05.

டபிள்யு.ஜே.எல்.யு.வீஜயவீர
தொழில் ஆணையாளர் அதிபதி

# தொழில் திணைக்களம்

01

## நோக்கம

சா்வதேச போட்டிப் பொருளாதாரத்திற்காக தொழில் அமைதியை உறுதிப்படுத்திய நாடு


## செயற்பாடு

தொழில் அமைதியை உறுதிப் படுத்திய ஏற்ற தொழில் சூழலை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு உதவுதல

## தொழில் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள

- நாட்டின் தொழில் அமைதியைக் கொண்டு செல்வதற்காக தொழில் பிரச்சனைகளை இணக்கம் செய்வதுடன் தொழில் சட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் தொழில் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- நாட்டில் தொழில் அமைதியை உறுதிப்படுத்துவதற்காக சமூக கலந்துரையாடலை மேம்படுத்துவதும் தொழிற்சட்டங்கள் தொடா்பாக தொழிலாள சமூகத்தை அறிவூட்டவ்
- தொழில் புலத்திற்கான தொழில் தரத்தை நடைமுறைப்படுத்தல், புதிய தொழில் புலங்கள் தொடா்பாக மதிப்பீடுகளைச் செய்தல் அதன் பொருட்டு சா்வதேசத்திற்கமைவாக தரங்களை ஆக்குதல்
- ஊழியா் நம்பிக்கை நிதியத்தை மேம்படுத்துதல், அதன் நலன்களை உறுப்பினா்களுக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட சேமலாபநிதிகளை மேற்பாா்வை செய்தல்
- பிள்ளைகள், பெண்கள் மற்றும் இளைஞா்களை வேலையில் ஈடுபடுத்தும் போது அவா்களின் பாதுகாப்புக்குரிய சட்டங்களைச் செயற்படுத்துதல்
- தொழிற்களங்களின் பாதுகாபபு மற்றும் சுகாதாரம்பேணுதல்களுக்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல், அது தொடா்பாக அறிவூட்டல், அவை நடைமுறைப்படுத்துவது தொடா்பில் மேற்பாா்வை


# 02 நிறுவகக் கட்டமைப்பு



03

# தொழில் பரிசோதனைகள்

2001 முதல் 2010 வரை செய்யப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை.




தொழில் பரிசோதனையின் உருவாக்கத்தினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள், தொழில் சட்டங்களின் கீழுள்ள ஏற்பாடுகளின் நியதிகளின்படி தொழில்தருநர் மற்றும் பணியாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் திருப்தியான ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் படைக்கான சூழலை தோற்றுவிப்பதாகும். தொழில் திணைக்களம் 11 வலய தொழில் அலுவலகங்களினூடாகச் செயற்படுகின்றது. இதன் கீழ் 39 மாவட்ட அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களும் இருப்பதுடன், 430 தொழில் அலுவலர்கள் மற்றும் பொறியியலாளர்கள் இந்த கள வேலையில் ஈடுபடுகின்றனர். தொழில் பரிசோதனைகள் இந்த திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்துகின்ற தொழில் சட்டங்களின் கீழ் வருகின்ற ஏற்பாடுகளினாலும், சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்களினால் உடன்படப்பட்ட பரிசோதனை நியமங்களினாலும் வலுப்படுத்தப்படுகின்றன. மேலுள்ள புள்ளிவிபரங்கள், கடந்த தசாப்தத்தில் மாவட்ட, உப தொழில் அலுவலகங்களினால் ஆற்றப்பட்ட பரிசோதனைகளின் பெறுபேற்றைக் காட்டுகின்றன. தலைமை அலுவலகத்தின் பிரிவுகளினாலும், மாவட்ட தொழில்சாலைப் பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களினாலும் ஆற்றப்பட்ட பரிசோதனைகளின் விபரங்கள் அடுத்த பந்திகளில் காட்டப்படும்.


**தொ**ழில் அமைதி மற்றும் முக்கியமான தொழிற்றுறைத் தொடர்புகள் என்பவை உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாக்கின்ற அதே வேளையில், சர்வதேசப் போட்டியை எதிர்கொள்வதற்கு தேசிய உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கான முக்கியமான காரணிகளாகும். முறையான தொழில் பரிசோதனைகள் செயன்முறையினால், தொழிலினால் ஏற்படுகின்ற விபத்துக்களைக் குறைத்தல், பொருத்தமான சம்பளங்கள் மற்றும் ஓய்வூதிய வயதில் சமூகப் பாதுகாப்புடன் கூடிய சேவை நிலையை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றினூடாக தொழில் அமைதி தாபிக்கப்படும். அப்போது மட்டுமே தொழில் முரண்பாடுகளற்ற, வேலை நிறுத்தங்களற்ற ஆக்கத் திறன்சார் வேலைத் தளமொன்று தோற்றுவிக்கப்படும்.

# 04 கைத்தொழில் தொடர்புகள் பிரிவு

தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் தொடர்புகள் பிரிவு, 11 வலய அலுவலகங்கள், 39 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 17 உப அலுவலகங்களுடன் இணைந்து கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதில் ஈடுபடுகின்றது. 2010 ஆம் ஆண்டில் 3210 கைத்தொழில் பிணக்குகள் அறிவிக்கப்பட்டிருந்தன. ஆண்டின் ஆரம்பத்தில் 2430 கைத்தொழில் பிணக்குகள் உள்ளடங்கலான 5640 கைத்தொழில் பிணக்குகளில் 2945 பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இச்செயன்முறையில் 612,212,660/- ரூபா அறவிடப்பட்டிருந்தது.

**2000-2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிணக்குகளைத் தீர்ப்பதிலுள்ள முன்னேற்றம்**

| ஆண்டு | தெரிவிக்கப் பட்ட பிணக்குகள் | தீர்க்கப்பட்ட பிணக்குகள் |
|---|---|---|
| 2000 | 20,635 | 13,096 |
| 2001 | 20,177 | 13,706 |
| 2002 | 18,760 | 14,847 |
| 2003 | 15,947 | 11,981 |
| 2004 | 12,990 | 9,798 |
| 2005 | 11,271 | 8,491 |
| 2006 | 11,273 | 8,853 |
| 2007 | 7,321 | 5,683 |
| 2008 | 7,558 | 5,469 |
| 2009 | 6,724 | 4,294 |
| 2010 | 5,640 | 2,945 |




**தொழில் தருநர்கள், பணியாளர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுகின்ற குறிக்கோளுடன் இந்தப் பிரிவு கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றது:**

1. **1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்.**
2. **1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பணியாளர்கள் தொழில் முடிவுறுத்தல் சட்டம்.**
3. **1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம்.**
4. **1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழில் சங்கக் கட்டளைச் சட்டம்.**

**இவற்றினை நடைமுறைப்படுத்துதலானது, கைத்தொழில் தொடர்புகள், தொழில் முடிவுறுத்தல், சமூகக் கலந்துரையாடல், வேலைத்தலக் கூட்டுறவு, தொழிற் சங்கங்கள் மற்றும் கைத்தொழில் நீதிமன்றம் போன்ற 5 உப பிரிவுகளின் கீழ் செய்யப்படுகின்றது.**

கைத்தொழில் தொடர்புகள் பிரிவின் கீழ் சமூகக் கலந்துரையாடல் அலகில் நடத்தப்பட்ட வேலையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து, தெரிவிக்கப்படுகின்ற கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கை குறைவடைந் திருக்கின்றது. கைத்தொழில் பிணக்குகள் கட்டுப்படுத்தப்படு வதற்கான பிறிதொரு காரணம், கள அலுவலர்களின், தொழில் அலுவலர்களின் பரிசோதனைகள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தொழில் ஆணையாளர் அதிபதியினால் ஒவ்வொரு மாதத்திலும் மதிப்பிடப்படுகின்ற முறையாகும்.

<u>கூட்டு ஒப்பந்தங்கள்</u>

**கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டு காலப்பகுதியில் 17 ஆக இருக்கையில் 2010 ஆம் காலப்பகுதியில் 42 ஆக இருந்தது.**

## தொழிற் சங்கங்களைப் பதிவு செய்தல்

**2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொழில் சங்கங்களின் எண்ணிக்கை 107 என்பதுடன் இரத்துச் செய்யப்பட்டவை 109 ஆகும். இதன்படி, 2010 ஆம் ஆண்டில் தொழில் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2024 ஆகும்.**

## கைத்தொழில் நீதிமன்றங்கள்

**2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டாய நடுத்தீர்ப்பிற்காக கைத்தொழில் தொடர்புகள் பிரிவிற்கு இணைக்கப்பட்ட கைத்தொழில் நீதிமன்றங்களுக்கு 59 பிணக்குகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.**

## சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்தல்

**கைத்தொழில் தொடர்புகள் பிரிவின் கீழ் வருகின்ற சமூகக் கலந்துரையாடல் அலகு 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4016 பேர்களின் பங்கேற்புடன் நிறுவன மட்டத்தில் 74 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியிருந்தது.**

## வேலை நிறுத்தங்கள்

| | தோட்டங்கள் | | நிறுவனங்கள் | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2009 | 2010 |
| ஆண்டு காலப்பகுதியில் வேலை நிறுத்தங்களின் எண்ணி. | 02 | 09 | 06 | 06 |
| பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 300 | 3158 | 4720 | 1923 |
| இழக்கப்பட்ட உழைப்பு நாட்களின் எண்ணிக்கை | 300 | 23037 | 7365 | 2034 |

2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேலை நிறுத்தங்களுக்கான (முன்னர் போன்ற) காரணங்கள் வேதனங்கள் அதிகரிக்காமை, நியமங்களைக் குறைத்தமை மற்றும் வேதனங்கள் செலுத்தப்படாமை என்பதுடன், தோட்டத் துறைகளில் உள் பிணக்குகள் பிரதான காரணமாக இருந்திருந்தன.

1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பணியாளர்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வருகின்ற செயற்பாடுகள்.

| | முறைப்பாடுகள் | | விண்ணப்பங்கள் | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2009 | 2010 |
| ஆண்டின் ஆரம்பத்தில் முடிவெடுக்கப்படாதிருந்த நிலுவை | 114 | 221 | 10 | 12 |
| ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டவற்றின் எண்ணி. | 185 | 110 | 48 | 27 |
| | 299 | 331 | 58 | 39 |
| ஆண்டு காலப்பகுதியில் முடிவெடுக்கப்பட்டவற்றின் எண்ணி. | 78 | 175 | 46 | 25 |
| ஆண்டு காலப்பகுதியில் முடிவெடுக்கப்படாதிருந்த நிலுவை | 221 | 156 | 12 | 14 |

# 05 தொழில் தரப் பிரிவு

2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழில் தரப் பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு:

காலாவதிக் காலப்பகுதி முடிவடைந்திருந்த 21 சம்பளச் சபைகளுக்கு பிரதிநிதிகளின் நியமனங்கள் செய்யப்பட்டன.

அரசாங்கம் கொள்கைத் தீர்மானமொன்றின் மூலம் அரச துறைக்கு சம்பள அதிகரிப்பைப் பிரகடனப்படுத்தியதற்கு ஒத்தவகையில் வேதன அதிகரிப்பொன்றை வழங்குமாறு அரசாங்கம் தனியார் துறையையும் கேட்டிருந்தது. இதன்படி, தற்போது தொழிற்பாட்டிலிருக்கின்ற 39 சம்பளச் சபைகள், உரிய சம்பள மீளாய்விற்காக அழைக்கப்பட்டிருந்தன. கருத்துக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டும், அத்தகைய கருத்துக்களை கவனத்திலெடுத்ததன் பின்னரான இறுதித் தீர்மானங்கள், மீளாயப்பட்ட ஆகக் குறைந்த வேதனம் செய்தித்தாள்களிலும், வர்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், நடைமுறைப்படுத்தப்பட்டுமிருந்தது.

சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுடன் தொடர்புபட்ட சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்பட்டு, வெளியிடப்பட்டது.

தேயிலை, இறப்பர் வளர்ப்பு கூட்டு ஒப்பந்தம் 2010.01.05 ஆம் திகதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது.

1941 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தினாலும், 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஊழியர்கள் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்துடன் இணங்காத தொழில்தருநர்கள் மற்றும் வியாபாரத் தளங்கள் மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களினால. பரிசோதனை செய்யப்பட்டதுடன், அத்தகைய மாதாந்த பரிசோதனைகள் மேற்பார்வையிடப்படுகின்றன. தொழில் தரப் பிரிவு மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படுகின்ற தகவல்களைப் பகுத்தாராய்வதுடன், அத்தகைய அறிக்கைகளை சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஏனைய உரிய தாபனங்களுக்கும் வழங்குகின்றது. 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாதாந்த பரிசோதனைகளின் முன்னேற்றம், தெரிவு செய்யப்பட்ட 15 மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் அந்த அலுவலர்களினால் பரிசீலிக்கப்பட்டதுடன், தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

தனியார் துறையில், தொழில் பாதுகாப்பு மற்றும் பணியாளர்களின் சேமநலன்களைப் பாதிக்கின்ற சேவை நிபந்தனைகள் மற்றும் நியதிகள் தொடர்பில் நியமங்களை வகுத்தமைப் பதற்கும், தொழில் திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவினால் அவற்றிற்கு சட்ட அந்தஸ்தை வழங்குவதற்கும் பின்வருகின்ற சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்.
2. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் சேவைகள், சம்பளங்கள் ஒழுங்கமைப்பு) சட்டம்.
3. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஊழியர்களுக்கான வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

“தயட்ட கிருள” நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக மொனறாகலை மாவட்டத்தில் மொனறாகலை, புத்தள, வெல்லவாய மற்றும் கதிர்காமம் ஆகிய நகரங்களில் தொழில் நியமங்களை மேம்படுத்துவது தொடர்பான 4 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

தென்னையுடன் இணைந்திருக்கின்ற கைத்தொழிலுக்கான சம்பளச் சபைகளின் தொழில்தருநர்கள், பிரதிநிதிகளினால் செய்யப்பட்ட வேண்டுகோளின் பேரில் (4 தாபனங்களைத் தெரிவு செய்ததன் பின்னர்) கூறப்பட்ட பணியாளர்களின் பிரச்சினைகள் மற்றும் உயர்ந்த விகிதத்தில் வேதனத்தை அதிகரிப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டது. இதன்படி, அந்தந் தொழிலின் உரிமையாளர் மற்றும் பணியாளர் தரப்புகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விகிதத்தில் வேதனங்களை அதிகரிக்க முடிந்துள்ளது.

06

## சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு

2010 ஆம் ஆண்டில் சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் அறவிடப்படுவதற்குள்ள பண நிலுவைத் தொகைகள் பின்வருமாறு:

| | சட்டம் | வழக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 01. | பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 2459 | 572,651,283.40 |
| 02. | கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 59 | 8,869,598.30 |
| 03. | தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 39 | 151,607,308.30 |
| 04. | சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 166 | 10,647,282.34 |
| 05. | கடை மற்றும் அலவலக ஊழியர் சட்டம் | 51 | 3,628,251.00 |
| 06. | தொழில் நியாயாதிக்க கட்டளைகள் | 134 | 53,903,580.06 |
| 07. | பெண்கள், இளம் நபர்கள், சிறுவர் தொழில் சட்டம் | 15 | - |
| 08. | ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 1119 | 259,280,009.00 |


ஊழியர் சேமலாப நிதியங்கள் தொடர்பாக இதுவரை கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை வேறுபடக்கூடும்.

இந்த ஆண்டு காலப்பகுதியில் நடவடிக்கை எடுப்பதற்காக சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவினால் பெறப்பட்ட வழக்குக் கோப்புகளில் விரைவான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், கூறப்பட்ட இந்த நிலை கீழே தரப்பட்ட வரிப்படத்தில் பிரதிபலிக்கின்றது. இதற்கான பிரதான காரணம், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பணியாளர்கள் சார்பாக திறக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்தமையாகும்.

2004-2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கோப்புக்கள

சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவின் பிரதான குறிக்கோள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளை மீறியவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கை எடுத்து தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்த வேண்டிய அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத் துவதனை உறுதிப்படுத்துவதற்கும், அதனூடாக வேலையாளர்களின் உரிமை களை வலுப்படுத்துதலும், தொழில் தருநருக்கும், பணியாளர்களுக்குமிடையிலான கூட்டுறவினை விருத்தி செய்தலுமாகும்.

அத்துடன், தொழில் சட்டங்கள் மீறுகின்றவர் களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைச் செயல்முறையில்,சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களினால் முகம் கொடுக்கப்பட்ட சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல், அவர்களது அறிவினை விருத்தி செய்தல், நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தல், தொழில் திணைக்களத்திற்கு எதிராக உயர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படும் சந்தர்ப்பத்தில் சட்டமாஅதிபதி திணைக்களத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவின் கீழ் தொழிற்படுத்தப்படுகின்றன.



# 07 பெண்கள்,சிறுவர் அலுவல்கள் பிரிவு

2010 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவின் செயலாற்றுகை பெண் பணியாளர்களின் தொழில்சார் உரிமைகள், காப்பு, சுகாதாரம் மற்றும் சேமநலனைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுடனிருந்தது.

## காலாண்டுப் பரிசோதனைகள்

பெண் பணியாளரின் சேமநலன், தொழில் பாதுகாப்பு மற்றும் சேவை நிலைமைகள் போன்றவை தொடர்பில் கடைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் தோட்டத் துறைகளில் 180 காலாண்டுப் பரிசோதனைகள் இந்தப் பிரிவினால் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்தேர்ச்சியான காலாண்டுப் பரிசோதனைகளைச் செய்வதன் மூலம் பெண் பணியாளர்கள் இந்தப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டப் பாதுகாப்பினைப் பெறுகின்றனர்.

## பெண் பணியாளர்களினால் செய்யப்பட்ட பொதுவான முறைப்பாடுகள் மீதான விசாரணை

பெண் பணியாளர்களின் பிரச்சனை தொடர்பில் 8 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளதுடன், உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து விசாரணைகள் நடத்தப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## மகப்பேற்று நன்மை தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல்

மகப்பேற்று நன்மைக் கொடுப்பனவு செலுத்தப்படாமை மற்றும் ஏனைய நிபந்தனைகளுடன் இணங்காமை தொடர்பான 3 முறைப்பாடுகள் மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து விசாரணை செய்யப்பட்டன.

## இரவு நேரக் கடமையில் பெண்களை அமர்த்துதல்

இரவில் பெண்களின் தொழிலை அனுமதிப்பதற்கு மாவட்ட அலுவலகங் களுடன் இணைந்து விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 43 இரவு நேரப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு, அனுமதியளிப்பதற்காக 216 விசாரணைகள் நடத்தப்பட்டன.

சிறுவரை வேலைக்கிடுதலைத் தடுக்கும் நோக்குடன், இலங்கையில் உற்பத்திச் செயல்முறைக்கு விசேட பங்களிப்பைச் செய்கின்ற வேலையாளர்களின் உரிமைகளையும், பணியாளர்களின் காப்பு மற்றும் சேமநலனையும் பாதுகாப்பதற் காக இந்தப் பிரிவு கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

01. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவரை தொழிலுக்கமர்த்துதுல் சட்டம்

02. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்.

03. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் பெண்கள், இளம் நபர்கள் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள்

04. 1945 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்களின் தொழிற்சாலைகள் சட்டளைச் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள்

## சிறுவரை வேலைக்கிடுதல் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்தல்

சிறுவர்,மகளீர் பணியகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பெயர் குறிப்பிட்டோ அல்லது அனாமதேயமாவோ பெறப்பட்ட சிறுவரை வேலைக்கிடுதல் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்து, அத்தகைய தொழில்தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டமை இப்பிரிவினால் செய்யப்பட்டது. இந்தப் பிரிவினால், தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்ற 109 முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன், பரிசோதனைகளின் பின்னர் 8 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

சர்வதேச மகளீர் தினம் – 08.03.2010

சர்வதேச மகளீர் தினத்தைக் கொண்டாடும் வைபவம் இராஜகிரியவிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கல்வி நிலையத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில், கட்டுநாயக, பியகம, கொக்கல்ல மற்றும் அவிசாவளை ஆகிய இடங்களிலுள்ள முதலீட்டு மேம்பாட்டு வலையத்தின் பெண் பணியாளர்களின் இயல்பான சிறப்புக்களை ஊக்குவிக்கின்ற நாட்டுக்கூத்துப் பாடல் போட்டியொன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில், தொழில் திணைக்களத்தில் தொடர்ந்தேர்ச்சியாக 25 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள 80 பெண் அலுவலர்களுக்கு ஞாபகார்த்த சின்னங்கள் வழங்கப்பட்டன.

சிறுவரை வேலைக்கிடுதலுக்கு எதிரான சர்வதேச தினம் – 12.06.2010

பெண்கள், சிறுவர் அலுவல்கள் பிரிவு, இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை விளக்கி சிறுவரை வேலைக்கிடுதலுக்கு எதிரான சர்வதேச தினத்தையொட்டி கையிதழ்களை விநியோகித்ததுடன், தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியிருந்தனர். இதற்கு மேலும், பெற்றோர்களுக்கிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் 56 நிகழ்ச்சித்திட்டங்கள் 56 மாவட்ட / உப அலுவலகங்களில் நடத்தப்பட்டன.

உலக சிறுவர் தினக் கொண்டாட்டம் – 01.10.2010

உலக சிறுவர் தினத்தையொட்டி 2010.10.01 ஆம் திகதி பிலியந்த கஹபொல ஸ்ரீபன்கானந்த தேசிய பாடசாலையில் 250 பாடசாலை சிறுவருக்குரிய விசேட ஞாபகார்த்த வைபவம் தொழில் உறவுகள், மேம்பாட்டு அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில், பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப் பைகள் என்பன பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. சிரம வாசனா நிதியம் இதற்கு அனுசரணை வழங்கியிருந்தது. இதற்கு ஒத்ததாக, சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் 200 மாணவர்களின் பங்கேற்புடன் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்காக திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் நடத்தப்பட்டது.

சிறுவரைத் தொழிலுக்கிடுவதைத் தடுப்பதற்கான கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் கீழ் பாடசாலை சமூகப் பங்காளர்களுக்காக 50 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

“லமா லங்கா” சஞ்சிகை

இந்த சஞ்சிகையின் 2010 ஏப்பிரல் மற்றும் ஒக்டோபர் மாத தொகுதிகள் வெளியிடப்பட்டன.

பெண்களைப் பலப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

இதன் கீழ் சுய வேலைவாய்ப்புக் கருத்திட்டங்கள், யட்டியாந்தோட்டை தொழில் அலுவலகத்தில் 2010.03.07 ஆம் திகதியும், வவுனியா மாவட்ட தொழில் அலுவலக வளாகத்தில் 2010.10.24 ஆம் திகதியும் நடத்தப்பட்டன. “தயட்ட கிருள” அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக இறப்பர் மரப்பால் தயாரிப்பு தொடர்பாக இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் 2010.11.02 ஆம் திகதி மொறாகலையிலுள்ள குமாரவத்தையில் நடத்தப்பட்டன.

# 08 விசேட புலனாய்வுப் பிரிவு

விசேட புலனாய்வுப் பிரிவினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் செய்யப்பட்ட பரிசோதனையினதும், நடத்தப்பட்ட விசாரணைகளினதும் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| கணிக்கப்பட்ட ஊ.சே.நிதியின் நிலுவைத் தொகை | ரூபா. | 31,498,357.98 |
| கணிக்கப்பட்ட நியதி வருமதியின் நிலுவைத் தொகை | ரூபா | 10,798,427.45 |
| பயன்பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | | 1522 |

2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட புலனாய்வுப் பிரிவினரால் செய்யப்பட்ட பரிசோதனைகள்.

| | 1ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு |
|---|---|---|---|---|
| அவசர பரிசோதனைகள் | 68 | 121 | 259 | 401 |
| துறைசார் பரிசோதனைகள் | 16 | 30 | 45 | 60 |
| கூட்டுப் பரிசோதனைகள் | 2 | 4 | 6 | 8 |
| பெரிய அளவிலான பரிசோதனைகள் | 15 | 31 | 35 | 39 |

**விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பு, இலங்கையில் தொழிற்றுறையில் அமைதியைத் தாபிக்கும் நோக்குடன், கீழே குறிப்பிடப்பட்ட தொழிற்பாடுகளை ஆற்றுவதாகும்.**

**- தேசிய மட்டத்தில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய தொழில்தருநர்கள் / பணியாளர்களுக்கிடையில் எழுகின்ற முக்கியமான பிணக்குகளைத் தீர்ப்பதில் தலையிடுதல்.**

**- மூடும் நிலையிலிருக்கின்ற தாபனங்களின் தொழில்தருநர்களை இனங்காணுதலும், அத்தகைய தாபனங்களின் பணியாளர்களுக்கு நிதி வருமதிகளை அறவிடுதலும்.**

**- பணியாளர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கான நடவடிக்கையை எடுத்தல்.**

**மனித வளங்கள் பணிக்கமர்த்தல் அலகு**

**சர்வதேச பாடசாலைகள், தனியார் கல்விசார் நிறுவனங்கள் மற்றும் அரசு சாராத தாபனங்களின் பணியாளர்கள் தொடர்பில் அனைத்து மாவட்டங்களை உள்ளடக்கி 2010 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பினை இந்த அலகு செய்துள்ளது.**

**இச்செயல்முறையில், திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டதுடன், அதன் பின்னர் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட கேள்விக் கொத்துகளினூடாக தரவுகள் பெறப் பட்டிருந்தன. தரவுகள் பெறுதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 80% ஆன கணக்கெடுப்பும் நிறைவு செய்யப்பட்டது.**

# ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

09

1959 ஆம் ஆண்டில், பணியாளர்களின் எண்ணிக்கை 850,000 ஆக இருக்கையில், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 6400 ஆகும். 2010 ஆம் ஆண்டில் பங்களிப்புச் செய்கின்ற செயலுறு தொழில்தருநர்களின் எண்ணிக்கை 62,000 (மதிப்பிடப்பட்டது) ஆகவும், பங்களிக்கின்ற செயலுறு பணியாளர்களின் எண்ணிக்கை 2.3 மில்லியனாகவும் (மதிப்பிடப்பட்டது) இருந்தது. அதேபோன்று, 1959 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான வருடாந்த உதவுதொகை 12 மில்லியன் ரூபா வாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட உதவுதொகை 54,203 மில்லியன் ரூபா வாகும்.

இதன்படி, 2010 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உறுப்புரிமையின் எண்ணிக்கை 13.3 மில்லியனாகும் (மதிப்பிடப்பட்டது), என்பதுடன் நிதியத்தின் அதிகரிப்பு இதுவரை 899,650 மில்லியன் ரூபாவாகும்.


2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 104,262 விண்ணப்பங்கள் தொடர்பில் உறுப்பினர்களின் நன்மைகளாக அல்லது அவர்களது சட்ட நன்மைகளாக 34,896 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

<u>உதவுதொகைகளைச் சேகரித்தல்</u>

**கடந்த தசாப்த காலப்பகுதியில், சட்டத்தின் திருத்தங்கள் காரணமாக உதவுதொகை அதிகரித்துள்ள வீதமும், நிருவாக மீள் ஒழுங்கமைப்புச் செயல்முறைகளும் கீழே தரப்பட்டுள்ளன:**

**முக்கியமான சமூகப் பாதுகாப்பு முறையான ஊழியர் சேமலாப நிதியம், இலங்கையில் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற தனியார் துறைப் பணியாளரின் ஓய்வு வாழ்க்கையைக் கழிப்பதற்கு சிறப்பான ஆதரவினை வழங்கும் நோக்கத்துடன், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், 1958, யூன் 01 ஆம் திகதியிலிருந்து பயனுறும் வகையில் தாபிக்கப்பட்டது. இந்நிதியத்தின் நிருவாகம், தொழில் ஆணையாளரின் கையிலுள்ளதுடன், நிதிக் கட்டுப்பாடு மத்திய வங்கியின் நாணய சபையிடம் இருக்கின்றது.**

| ஆண்டு | உதவுதொகை (ரூபா.மில்.) |
|---|---|
| 1999 | 13,679 |
| 2000 | 17,009 |
| 2001 | 17,934 |
| 2002 | 19,201 |
| 2003 | 20,348 |
| 2004 | 23,872 |
| 2005 | 24,324 |
| 2006 | 31,720 |
| 2007 | 40,574 |
| 2008 | 45,951 |
| 2009 | 48,712 |
| 2010 | 54,796 |



ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

**ஊ.சே.நிதியத்தின் செயற்பாடுகளைப் பரவலாக்குதல்**

**இந்த ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகள், யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய மாவட்ட அலுவலகங்களுக்கும், கல்முனை உதவித் தொழில் அலுவலகத்திற்கும் பரவலாக்கப்பட்டிருந்தன.**

**பயனாளிகளுக்கு சில நன்மைகளை வழங்கும் நோக்கத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு புதிய திருத்தங்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இந்தத் திருத்தங்களின் நோக்கம், வீடமைப்பு நோக்கங்கள் மற்றும் மருத்துவ சிகிச்சைக்கு பணியாளர்களின் கணக்கிலுள்ள மீதியில்30% இனைச் செலுத்துவதாகும்.**

**2010 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம்:**


| | |
|---|---|
| **நன்மைக் கொடுப்பனவுகள்** | |
| • பயனாளிகளின் எண்ணிக்கை | 104,262 |
| • செலுத்தப்பட்ட நன்மைகள் | ரூபா (மில்லியன்) 34,896 |
| • | ரூபா (மில்லியன்) 258 |
| **ஊ.சே.நி உதவுதொகைகளை அறவிட்டமையும், அறவீடுகளும்** | |
| **ஊ.சே.நி வீடமைப்புக் கடன் கொடுப்பனவு** | |
| • அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண். | |
| • அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் | 13,848 |
| | ரூபா (மில்லியன்) 4,512 |
| | 5,338 |
| **புதிய தொழில்தருநர்களின் எண்ணிக்கை** | |
| **ஊ.சே.நி அங்கத்தவர்களின் அறிக்கைகளைக் கணினி மயப்படுத்துதல்** | |
| | 345,813 |
| • தரவுகளை கணினிமயப்படுத்தியமை (‘ஏ’ மற்றும் ‘எச்’) | 1,041,006 |
| • ஸ்கானிங் (‘ஏ’ மற்றும் ‘எச்’) | |

**ஊ.சே.நி உறுப்பினர்களை மீளப் பதிவு செய்கின்ற செயல்முறையில் பணியாளர்களின் கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுதல்**

**இக்கருத்திட்டம், ஊ.சே.நி உறுப்பினர்களுக்கு தனித்துவமான இலக்கமொன்றை ஒதுக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கைவிரல் அடையாளத்தை பெறுதல் தொடர்பில் 415,850 பணியாளர்கள் தொடர்பான வேலை நிறைவு செய்யப்பட்டிருக்கையில், பணியாளர்களை மீளப் பதிவு செய்யும் இக்கருத்திட்டத்தின் கீழ் 702,702 பணியாளர்கள் தொடர்பான வேலை முடிவடைந்துள்ளது.**

# தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

2000 - 2010 ஆண்டு காலப்பகுதியில் தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல் மற்றும் பரிசோதனைகள் செய்யப்படுதலிலுள்ள முன்னேற்றம்




| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No.of factories registered | 9390 | 11113 | 12324 | 13879 | 14384 | 15253 | 16057 | 17002 | 18247 | 20053 |
| No. of inspections carried out | 3151 | 4420 | 4123 | 3670 | 4089 | 3916 | 3507 | 4344 | 4636 | 4482 |

**<u>தேசிய பாதுகாப்பு விருதுகள்</u>**

இந்த விருதுகள், இரண்டு ஆண்டிற்கொருமுறை வழங்கப்படுகின்றன. விருதினை வெற்றிபெறுவோர் தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவின் பொறியியலாளர் குழாத்தினால் தெரிவு செய்யப்படுகின்றனர். இது, பெரிய அளவு, நடுத்தர அளவு மற்றும் சிறிய அளவு என மூன்று வகைகளில் நடத்தப்படுகின்றது. தேசிய பாதுகாப்பு விருது, தொழில் பாதுகாப்பு விருது என்று இரண்டு வகையான விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பிரிவின் பிரதான பொறுப்பு, தொழிற்சாலை வேலையாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சேநலனை உறுதிப்படுத்தும் நோக்கில் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற் சாலைகள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகும். இந்தப் பிரிவு, கொழும்பு, கம்பஹா, குருணாகல், கண்டி, காலி, யாழ்ப்பாணம், அனுராதபுரம், இரத்தினபுரி, பதுளை, களுத்துறை ஆகிய நகரங்களில் அமைந்திருக்கின்ற 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களினூடாக நாடளாவியரீதியில் தொழிற்படுகின்றது.

**<u>தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்</u>**

தேசிய சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் 2 ஆம் வாரத்தில் கொண்டாடப் படுகின்றது. 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பிரிவின் பொறியியலாளர் களால், முதலீட்டு ஊக்குவிப்பு வலையங்கள் மற்றும் நாடளாவியரீதியிலுள்ள முறைசார், முறைசாரா துறைகளில் இந்த வாரம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.2010,ஒக்டோபர் 15 ஆம் திகதியில் கட்டுநாயக ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையத்தில் விசேட பயிற்சிப் பட்டறையொன்றினை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

# தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

**மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகம் - 2010 ஆம் ஆண்டு**

| | அனுராதபு-ரம் | கம்பகா | கொழும்பு | | காலி | இரத்தினபு-ரி | யாழ்ப்பா-ணம் | களுத்துறை | குருணாகல் | பதுளை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | 1099 | 3005 | 3651 | 1869 | 3270 | 1255 | 2399 | 1152 | 1749 | 604 | 20053 |
| தொழிற்சாலைகள், ஏனையவைற்றின் பரிசோதனைகள | 217 | 533 | 1355 | 419 | 168 | 217 | 457 | 174 | 626 | 316 | 4482 |
| மரணத்தை விளைவிக்கும் விபத்துக்கள் | 06 | 06 | 15 | 09 | 14 | 02 | 01 | 03 | 03 | 05 | 64 |
| மரணத்தை விளைவிக்காத விபத்துக்கள் | 20 | 433 | 436 | 109 | 86 | 73 | 09 | 155 | 81 | 54 | 1456 |
| கொதி கலன்களின் பரிசோதனை | 87 | 187 | 289 | 103 | 40 | 24 | - | 66 | 171 | 32 | 999 |
| ஆவி போக்கிகளின் பரிசோதனை | 19 | 165 | 148 | 43 | 17 | 05 | - | 77 | 86 | 23 | 583 |
| காற்றுப் போக்கிகளின் பரிசோதனை | 54 | 426 | 402 | 377 | 261 | 172 | - | 181 | 325 | 66 | 2264 |
| வாயு போக்கிகளின் பரிசோதனை | - | - | 84 | - | 03 | - | - | 29 | - | 09 | 125 |
| ஏனைய அதிக ஆபத்தான இயந்திரங்களின் பரிசோதனை | 12 | 325 | 364 | 485 | 60 | 127 | - | 33 | 254 | 47 | 1707 |
| திட்டங்களின் அங்கீகாரங்கள் | 01 | 55 | 28 | 04 | 01 | - | 04 | 11 | - | - | 104 |
| விரிவுரைகளும் கருத்தரங்குகளும் | 04 | 60 | 33 | 23 | 06 | - | 35 | 29 | 08 | 67 | 265 |
| நீதிமன்ற வழக்குகள் | - | - | 04 | 08 | 01 | - | - | - | 16 | - | 29 |

# தொழில்சார் சுகாதாரப் பிரிவு

11

**சூழல்சார்ந்த அளவீடுகள்**

வேலைத்தளங்களில் வேலைச் சூழலில் பௌதீக மற்றும் இரசாயன ஆபத்துக்களை அளவிடுவதற்கு இப்பிரிவிலுள்ள இணைந்த தெரிவிப்பி உபகரணங்கள் பயன்படுத்துகின்றன.

**ஈரல் தொழிற்பாடு பற்றிய பரிசோதனை**

இந்த மருத்துவ பரிசோதனைகள், இரசாயனத்தை பயன்படுத்துகின்ற கைத்தொழில் துறை களிலுள்ள விசேடமாக கல்நார் மற்றும் சீமெந்து தொழில்கள், புடவை நெய்யும் தொழிலில் ஈடுபடுகின்ற வேலையாளர்களுக்காக வருடாந்தம் செய்யப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 170 ஈரல் பரிசோதனைகள் செய்யப்பட்டிருந்தன.

**காது கேட்கும் சக்தியைப் பரிசோதித்தல்**

இந்தப் பிரிவு, வேலைத் தளங்களில் இரைச்சல் நிலைமைக்கு வளமையாக உள்ளாகின்ற பணியாளர்களின் காது கேட்கும் சக்தியைப் பரிசோதிக்கின்றது. 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 230 பரிசோதனைகள் செய்யப்பட்டன.

**ஊ.சே.நி மருத்துவ சபை**

தொழில்சார் சுகாதாரப் பிரிவின் பிரதித் தொழில் ஆணையாளரே ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பிலான தொழில் திணைக்களத்தின் மருத்துவ சபையின் தவிசாளராவார்.

ஓய்வூதிய வயதினை அடைவதற்கு முன்னர் நோயினால் அல்லது விபத்தினால் நிரந்தரமாக வேலை செய்வதற்கான அற்றல் அற்ற நபர்களுக்கு ஊ.சே.நிதியைச் செலுத்துவதற்கு இந்தச் சபை அங்கீகாரமளிக்கின்றது. 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பன்னிரண்டு (12) மருத்துவ சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், 600 பணியாளர்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பிரிவின் நோக்கம்,தொழில்சார் ஆபத்துக்கள், தொழில்சார் நோய்கள் மற்றும் வேலைத்தளங்களிலுள்ள ஏற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட அசௌகரியமான சுகாதார நிலைமை களைக் குறைத்தலாகும்.

வேலையாளர்களின் வினைத்திறன், உற்பத்தித்திறன் மற்றும் விபத்துக்கள், ஆபத்துக்கள் அற்ற சேவை சூழலொன்றின் மீதும், தொழில்சார் சுகாதாரம் சிறப்பாக பேணப்படும் சூழலிலும் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் தரம் தங்கியிருக்கின்றது என்பது இரகசியமானதொன்றல்ல. தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி, பணியாளரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டரீதியான தேவைப்பாடு ஆகும். தொழில்சார் சுகாதாரப் பிரிவு மேலேயுள்ள குறிக்கோள்களை அடையும் நோக்கில் ஒரு தொடர் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

**வேலையாளர் நட்டஈட்டை மதிப்பிடுதல்**

இந்தப் பிரிவினால் செய்யப்படுகின்ற முக்கிய தொழிற்பாடு தொழில்சார் நோய்கள் மற்றும் விபத்துக்கள் காரணமாக வேலையாளர் களுக்குக் கொடுக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பீடு செய்தலாகும். 2010 ஆம் அண்டில் 55 பணியாளர்கள் பரிசீலிக்கப்பட்டிருந்தனர்.

**பயிற்சி மற்றும் கல்வி**

இந்தப் பிரிவின் பிரதி ஆணையாளர் மற்றும் ஆய்வு அலுவலர் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முகாமைத்துவ மட்ட அலுவலர்களுக்கான 25 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும், மேற்பார்வையாளர் அலுவலர் மட்டத்திலான 35 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும், ஏனைய பணியாளர் களுக்கான 40 நிகழ்ச்சித்திட்டங்களிலும் வள ஆளர்களாகச் செயற்பட்டிருந்தனர்.

# 12 திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

**திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி**

திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்குவதற்கு அத்தகைய செயற்பாடுகளின் காலாண்டு முன்னேற்றங்களில் கவனம்செலுத்தி செயற்றிட்டத்தை தயாரித்தலும்,அதனூடக திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகள் அவற்றின் தொழிற்பாடுகளை மதிப்பிட முடியும். இவையும்கூட திட்டமிடப்பட்ட நிலையில் மாற்றம் எற்படுகின்றவிடத்து இலக்கு வைக்கப்பட்ட செயலாற்றகையை மீளவும் அடைவதற்கான வழிகாட்டலை வழங்குகின்றன.

**முன்னேற்ற மீளாய்வு**

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு தொழில் அலுவலர்களினால் நாடளாவியரீதியில் நடத்தப்படுகின்ற பரிசோதனைகளின் தரத்தை மதிப்பிடுவதற்காக அவர்களின் மாதாந்த நாளேடுகளை பரிசீலிக்கின்றது. அத்தகைய பரிசோதனைகளில் அடையாளங்காணப்பட்ட குறைகளைத் திருத்துவதற்கு வழிகாட்டலும் வழங்கப்படுகின்றது. அத்துடன், இந்தப் பிரிவு நாட்டின் பல்வேறு வலைய மட்டங்களில் நடத்தப்பட்ட முன்னேற்ற தொழிற்பாட்டு அமர்வினை ஒருங்கிணைக்கின்றது.

**வெளியீடுகள்**

தொழில் திணைக்களத்தில் பயன்படுத்துவதற்குத் தேவைப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை அச்சிடுவதில் துணையாக இருந்துள்ளது.

01. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
02. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
03. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்.
04. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்.
05. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்.
06. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்.
07. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாளர் தொழில் முடிவுறுத்தல் சட்டம்
08. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாளர் தொழில் முடிவுறுத்தல் சட்டம்

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் செயற்பணி திணைக்களத்தின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்காக சிறந்த அலுவலர் தொகுதியை உருவாக்குதல், தொழில் அமைதியைத் தாபிப்பதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதில் உதவுதல், தரவுகளைத் தயாரித்தல் மற்றும் ஆய்வுகளை நடத்துதல். இந்தப் பிரிவு இங்குள்ள 4 துறைகளின் கீழ் தொழிற்படுகின்றது.

01. தொழில் அலுவலர்களின் பயிற்சி
02. திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி
03. முன்னேற்ற மீளாய்வு
04. வெளியீட்டு விடயங்கள்

**திணைக்களத்தின் அலுவலர்களுக்கான பயிற்சி**

திணைக்களத்தின் வெவ்வேறு மட்டங்களிலுள்ள அலுவலர்களுக்காகச் செய்யப்பட்ட பயிற்சி ஒழுங்குகள் பின்வருமாறு :

| நிகழ்ச்சித்திட்டம் / விடயம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் |
|---|---|---|
| புதிய உதவித் தொழில் ஆணையாளர் களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 30 |
| புதிய தொழில் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 5 | 263 |
| தொழில் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (உள்நாடு) | 2 | 110 |
| கணினி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 33 | 1049 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - ஏனையவை | 2 | 115 |

இதற்கு மேலதிகமாக, திணைக்களத்தின் 8 பதவிநிலை அலுவலர்கள் பட்டப்பிற்கல்வி டிப்புளோமா பாடநெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோன்று, 29 அலுவலர்கள் ஏனைய தாபனங்களில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

# 13 புள்ளிவிபரவியல் பிரிவு

வருடாந்த வேலைவாய்ப்புக் கணக்கெடுப்பு

**இந்தக் கணக்கெடுப்பின் பிரதான குறிக்கோள், நாட்டின் நிருவாக மற்றும் திட்டமிடல் தேவைப்பாடுகளுக்கான புள்ளிவிபரவியல் தரவினைச் சேகரித்தலாகும். இந்தக் கணக்கெடுப்பின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதத்தில் தொழில்வாய்ப்பு தொடர்பான தகவல்கள், தனியார் துறைத் தாபனங்களிலிருந்தும், வேதனங்கள் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பணியாளர்கள் 5 பேரை அல்லது அதற்கும் அதிகமாகக் கொண்டிருக்கின்ற அரசுசார் துறையிலுள்ள உற்பத்தி, விநியோகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தாபனங்களிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றன. இந்த தகவலைப் பயன்படுத்துபவர்களின் வசதிக்காக, இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் செயலாற்றுகின்ற தாபனங்களின் விபரங்கள் இந்த அறிக்கையின் விசேட பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.**

தொழில் புள்ளிவிபரவியல் - 2009 ஆம் ஆண்டு விடயங்களை அச்சிடலும், வெளியிடலும்

**வருடாந்த வெளியீடான காலத்துடன் கூடிய, நம்பிக்கையான தகவல்களை உள்ளடக்குகின்ற புள்ளி விபரங்கள் 2009 ஆண்டில் உரிய நேரத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்படுகின்றன.**

**பொது உழைப்பு மற்றும் வேலையாற்றியுள்ள மணித்தியாலங்களின் எண்ணிக்கைக் கணக்கெடுப்பு**

ஆண்டிற்கு இருமுறை நடத்தப்படுகின்ற இந்த கணக்கெடுப்பின் பிரதான குறிக்கோள் பொதுவான மாதாந்த உழைப்புகள் மற்றும் சம்பளச் சபைகளினால் நிறுவப்பட்ட ஆகக்குறைந்த சம்பளங்களுள்ள கைத்தொழில் தாபனங்களில் வேலையாற்றியுள்ள மணித்தியாலங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தலாகும்.

இந்த கணக்கெடுப்பு, தெரிவுசெய்யப்பட்ட தாபனங்களுக்கு தபாலில் அனுப்பப்பட்ட கேள்விக்கொத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மற்றும் செப்தெம்பர் மாதங் களில் நடத்தப்படுகின்றது. இந்த கணக்கெடுப் பினூடாக பெறப்பட்ட தகவல், தொகை மதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத் திற்கும், ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழில் தாபனம் போன்ற அத்தகைய சர்வதேச தாபனங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. 2009 மார்ச், செப்தெம்பர் மாதங்களில் நடத்தப்பட்ட இரண்டு கணக்கெடுப்புகளை உள்ளடக்கிய அறிக்கையைத் தொகுத்தல் நிறைவடைந்துள்ளது.

**புள்ளிவிபரவியல் பிரிவின் பிரதான தொழிற்பாடு, இலங்கையில் தொழில் துறையில் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் தொடர்பான தகவலைச் சேகரித்து, பகுத்தாராய்ந்து வெளியிடுவதாகும். இந்த நோக்கத்திற்காக வருடாந்தம் நடத்தப்படு கின்ற இரண்டு பிரதான தபால் கணக்கெடுப்பினூடாக வேலை மணியத்தியாலங்களின் எண்ணிக்கை பற்றிய தரவு சேகரிக்கப்படுகின்றது. இந்தப் பிவினால் ஆற்றப்படுகின்ற ஏனைய தொழிற்பாடுகள் பல்வேறு நிருவாகத் தரவின் வரைவுகளைத் தயாரித்தல் மற்றும் ஆகக் குறைந்த வேதனச் சுட்டியைத் தயாரித்தல் என்பவையாகும்.**

**துறைகளின் மூலமான நாளாந்த சராசரி உழைப்புக்கள் (ரூபா) – 1999-2009**

| துறை / ஆண்டு | விவசாயம் (தோட்டத் துறை) (ரூபா) | உற்பத்தித் துறை (ரூபா) | நிருமாணத் துறை (ரூபா) |
|---|---|---|---|
| 1999 | 96.89 | 199.20 | 241.11 |
| 2000 | 104.12 | 221.11 | 285.99 |
| 2001 | 112.11 | 230.66 | 263.12 |
| 2002 | 128.72 | 273.10 | 259.63 |
| 2003 | 138.43 | 306.84 | 276.42 |
| 2004 | 152.94 | 310.84 | 335.70 |
| 2005 | 178.47 | 336.49 | 416.75 |
| 2006 | 206.33 | 356.11 | 424.55 |
| 2007 | 198.01 | 411.60 | 408.37 |
| 2008 | 298.85 | 469.47 | 443.91 |
| 2009 | 323.20 | 492.93 | 472.58 |

**ஆகக் குறைந்த சம்பளச் சுட்டி 2000-2010 (அடிப்படை : 1978 = 100)**

இந்தச் சுட்டெண் மற்றும் அதற்கான சமகாலத் திருத்தங்கள் சம்பளச் சபைகளின் கீழ் தொழில் ஆணையாளர் அதிபதியினால் நிர்ணயிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த சம்பளங்களினடிப்படையில் மாதாந்தம் மற்றும் வருடாந்த அடிப்படையில் அறிவிக்கப்படுகின்றது.

**ஆகக் குறைந்த சம்பளச் சுட்டி 2000-2010**

| ஆண்டு | விவசாயம் (தோட்டத்துறை) | கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை | சேவைகள் துறை | அனைத்துத் துறைகள் |
|---|---|---|---|---|
| 2000 | 1,142.7 | 857.1 | 559.7 | 1,000.4 |
| 2001 | 1,176.4 | 919.7 | 657.6 | 1,049.2 |
| 2002 | 1,269.6 | 986.5 | 678.0 | 1,126.5 |
| 2003 | 1,382.3 | 1,009.4 | 678.0 | 1,205.3 |
| 2004 | 1,397.7 | 1,044.1 | 751.0 | 1,233.1 |
| 2005 | 1,527.4 | 1,078.4 | 779.7 | 1,329.7 |
| 2006 | 1,567.1 | 1,090.6 | 779.7 | 1,358.2 |
| 2007 | 1,821.4 | 1,522.4 | 157.0 | 1,648.7 |
| 2008 | 2,286.6 | 1,877.5 | 1,370.8 | 2,070.4 |
| 2009 | 2,349.4 | 2,053.9 | 1,545.8 | 2,171.4 |
| 2010 | 3,328.0 | 2,199.0 | 1,673.3 | 2,865.3 |

# 14 நிதிப் பிரிவு

2010 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவிற்காக 769,571,000/- ரூபா தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 760,752,134/- ரூபா செலவுறப்பட்டிருந்தது. மூலதனச் செலவாக ஒதுக்கப்பட்ட 222,000,000/- ரூபாவில் 218,993,557/- ரூபா செலவுறப்பட்டது. இதன்படி, மூலதனச் செலவினத்தில் 98.6% மற்றும் மீண்டெழும் செலவினத்தில் 98.8% முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது.

| விவரணம் | | 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 02 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
|---|---|---|---|---|---|
| | | 1-1 | 2-2 | 2-3 | 2-4 |
| மீண்டெழுவது | ஒதுக்கீடு | 414,623,000 | 54,093,000 | 42,862,000 | 257,993,000 |
| | செலவினம் | 411,304,216 | 52,308,827 | 42,054,231 | 255,084,860 |
| மூலதனம் | ஏற்பாடு | 66,700,000 | 5,900,000 | 1,150,000 | 148,250,000 |
| | செலவினம் | 66,315,647 | 5,107,407 | 994,742 | 146,575,761 |

# அகக் கணக்காய்வுப் பிரிவு

**இந்தப் பிரிவின் பிரதான இலக்கு, திணைக்களத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையும் நோக்கில் அரச நிதிசார் கொள்கைகள் மற்றும் நிதிசார் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்ற உரிய நிதிசார் நிருவாகமொன்றைப் பராமரிப்பதாகும். திணைக்களத்தின் இலக்குகளை அடைவதற்கு காலத்துடன் கூடிய தேவைகளின்படி, வருடாந்த மதிப்பீடு களினால் ஒதுக்கப்பட்ட பணங்களை உரிய பயனுறுதிவாய்ந்த முறையில் செலவுறுதல் மற்றும் தேவைகளுக்கும், உறப்படுகின்ற செலவினங்களுக்குமாக வெவ்வேறு அலுவலகங்களின் பல்வேறு கருத்திட்டங்களுக்காகத் தேவைப்பட்ட பணங்களை ஒதுக்குதல்.**

<u>அகக் கணக்காய்வுப் பிரிவு</u>

இந்தப் பிரிவு, முகாமைத்துவ கணக்காய்வு, அரச கணக்கீட்டு நடைமுறையுடன் சுயமாக இணங்கி தொழில் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு, செயற்பாடுகளின் செயலாற்று கையினூடாக உறுதிப்படுத்துகின்றது.

2010 ஆம் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கமைய முன்னேற்ற மீளாய்வுகளின்

செயற்பாடுகளைப் பரிசீலித்தல் உள்ளடங்கலாக திணைக்களத்தின் 40 பிரிவுகளின் வேலைகளைப் பரிசீலிக்க வேண்டியிருக்கின்றது. அவற்றில், 25 அலுவலகங்கள் பரிசீலிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு பிரிவினதும் பலவீனங்கள் இனங்காணப்பட்டதுடன், அத்தகைய பலவீனங்களைச் சரிசெய்வதற்கான முன்மொழிவுகளை உள்ளடக்கியிருக்கின்ற அகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பதவியினரின் பற்றாக்குறை காரணமாக 40 அலுவலகங்களில் 25 அலுவலகங்களையே பரிசீலிக்க முடிந்தது.

# நிருவாகப் பிரிவு

15

நிருவாகப் பிரிவின் பொறுப்புக்களை ஆக்கத்திறன்சார் விதத்தில் ஆற்றுவதன் மூலம் மாவட்ட, உப தொழில் அலுவலகங்களை மேம்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகள் செய்யப்பட்டன.

| அலுவலகம் | சலவுறுப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|
| மொனறாகலை, பதிவேட்டு அறை மற்றும் களஞ்சிய நிருமாணம்-நிலை II | 1,740,900.00 |
| கந்தளாய் தொழில் அலுவலக நிருமாணம்-நிலை I | 758,400.00 |
| கப்புத்தளை மாவட்ட தொழில் அலுவலக நிருமாணம்-நிலை III | 2,604,825.00 |
| கப்புத்தளை அலுவலகப் படிகளுக்கு சட்டம் அமைத்தல் | 232,900.00 |
| களுத்துறை அலுவலக நிருமாணம்-நிலை II | 4,693,700.00 |
| களுத்துறை அலுவலக நிருமாணம்-நிலை III | 1,724,000.00 |
| அனுராதபுர வலய அலுவலக நிருமாணம் | 759,570.00 |
| அனுராதபுர உ.தொ.ஆ அலுவலக நிருமாணம் – நிலை II | 2,590,530.00 |
| அம்பாறை அலுவலக நிருமாணம்-நிலை II | 968,400.00 |
| மட்டக்களப்பு அலுவலக நிருமாணம்-நிலை II | 4,393,900.00 |
| குளியாப்பிட்டி அலுவலக நிருமாணம்-நிலை II | 806,100.00 |
| மொனறாகலை களஞ்சியக் கட்டடத் தொகுதியின் மேல் மாடிக்கு கிறில் அமைத்தல் | 92,475.00 |
| மட்டக்களப்பு அலுவலக நிருமாணம்-நிலை I | 7,924,900.00 |
| மாவட்ட அலுவலகங்களில் சிறிய நிருமாண வேலை | 278,780.00 |

**தொ**ழில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளைத் தயாரித்தலும், விருத்தி செய்தலும் மற்றும் தொழில் திணைக்களத்தின் பௌதீக, மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துதல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

இந்தப் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற 04 உப பிரிவுகள் :

- நிருவாகக் கிளை
- தாபனக் கிளை
- கட்டடப் பராமரிப்புப் அலகு
- நூலகம் மற்றும் தகவல் பிரிவு

நிருமாண வேலையை எதிர்பார்க்கப்பட்டது போன்று பூர்த்திசெய்ய முடியவில்லை. ஆண்டிறுதியில் கடுமையான மழை காரணமாக ஒப்பந்தகாரர்கள் வேலையைக் கைவிட்டிருந்தனர்.

யாழ்ப்பாண தொழில் அலுவலகக் கட்டடத் தொகுதியை நிருமாணிப்பதற்காக 5 மில்லியன் ரூபா கட்டடங்கள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று, 16,630,620.00 ரூபா தொகை திறைசேரியின் அங்கீகாரத்துடன் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது.

நிருவாகப் பிரிவு

பராமரிப்புச் செலவிற்காக வழங்கப்பட்ட பணத் தொகை கீழே தரப்பட்டுள்ளது:

**தலைமை அலுவலகம்**

| செலவளிக்கப்பட்ட | தொகை (ரூபா) |
|---|---|
| நிலத் தளத்தின் ஒரு பகுதிக்கு வர்ணம் தீட்டியமை, | |
| வி.ஐ.பீ மின் தூக்கிக்கு அருகில் ரைல் பதித்தல் | 55,500.00 |
| 10 ஆவது தள விளையாட்டு கூடத்திற்கு வர்ணம் தீட்டியமை | 73,400.00 |
| தொழில் செயலகத்தை பழுதுபார்த்தமை | 240,600.00 |
| பெலியத்த நிலத்தைச் சுற்றி வேலி அமைத்தமை | 293,700.00 |
| அவிசாவெல அலுவலக மலசலகூடத்தைத் திருத்தியமை | 315,900.00 |
| மாத்தறைக் கட்டடத்திற்கு வர்ணம் தீட்டியமை | 260,700.00 |
| கல்முனை தொழில் அலுவலகத்தில் பிரிக்கின்ற சட்டத்தை அமைத்தமை | 563,600.00 |
| நிதிப் பிரிவிற்குள் புறாக்கள் நுழைவதைத் தடுப்பதற்காக வயர் வலைகளை பொருத்துதல் | 115,000.00 |
| தொழிற் செயலகத்திற்கு முன்னாலுள்ள கறாச்சுகளைத் திருத்தியமை | 130,500.00 |
| தலைமை அலுவலகத்தின் கூரை திருத்தியமை | 485,000.00 |
| நிதிப் பிரிவில் பிரிக்கும் சட்டத்தை அமைத்தமை | 347,600.00 |
| மாவட்ட அலுவலகத்தின் (பராமரிப்பு அலகு) திருத்த வேலைக்கு தேவைப்பட்ட பொருட்கள் | 200,000.00 |
| அனுராதபுர அலுவலகத்தைத் திருத்தியமை | 232,000.00 |
| ஜாவத்தை அலுவலகத்தைத் திருத்தியமை | 503,000.00 |
| மாவட்ட அலுவலகங்களில் சிறிய திருத்தங்கள் | 133,000.00 |

<u>திணைக்களத்தின் பதவியினர்</u>

| | |
|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தப் பதவியினர் | 2215 |
| புதிய ஆட்சேர்ப்புகள் | 130 |
| இடமாற்றத்தின் பேரில் திணைக்களத்திற்கு இணைந்தோர் | 24 |
| ஓய்வுபெற்றோர் | (69) |
| திணைக்களத்திலிருந்து இடம் மாற்றம் பெற்றோர் | (22) |
| ஏனைய வழிகளினால் திணைக்களத்திலிருந்து நீங்கியவர்கள் | (64) |
| ஆண்டின் இறுதியில் பதவியினர் | 2214 |

<u>ஆண்டு காலப்பகுதியில் புதிய ஆட்சேர்ப்புகளும்,ஓய்வுபெற்றோரும்</u>

| | புதிய ஆட்சேர்ப்புகள் | ஓய்வுபெற்றோர் |
|---|---|---|
| தொழில் ஆணையாளர் | – | 01 |
| உதவித் தொழில் ஆணையாளர் | – | 08 |
| தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் | – | 01 |
| தொழில் அலுவலகர் (சிங்களம்/ தமிழ் மொழி மூலம்) | 100 | 19 |
| கைவிரல் பரிசோதகர் | – | 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | – | 29 |
| ஊ.சே.நி எழுதுவினைஞர் | – | 01 |
| பதிவுப் பேணுநர் | – | 01 |
| அலுவலகப் பொறுப்பாளர் | 04 | – |
| சுற்று பங்களா பேணுநர் | 01 | – |
| அலுவலக உதவியாளர் | 13 | 06 |
| சாரதிகள் | – | 02 |
| காவலாளி | 07 | – |
| சுத்திகரிப்பு தொழிலாளி | 05 | – |

## வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்,கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள

| | பெயர் | பதவி நிலை | நாடு - பாடநெறி/ கருத்தரங்கு/ பயிற்சிப் பட்டறை | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 01 | திரு.கே.பீ.யோகச-ந்திரா | உதவித் தொழில் ஆணையாளர் | அவுஸ்திரேலியா - பட்டப் பிற்கல்விப் பாடநெறி | 2009.01.12-2-010.12.19 |
| 02 | திருமதி.கே.ஆர்.எம்.-டி. பெர்னாந்து | சிரேஷ்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் | கொரியா - பணியாளர்களின் பாதுகாப்புப் பியிற்சிப் பாடநெறி | 2010.06.20-2-010.07.01 |
| 03 | திருமதி.டி.ஏ.பிறேமா-வதி | பிரதித் தொழில் ஆணையாளர் | சுவிற்சிலாந்து - சர்வதேச தொழில் மாநாடு | 2010.06.02-2-010.06.18 |
| 04 | திரு.எச்.பீ.ஜினதாஸ | பிரதித் தொழில் ஆணையாளர் | சுவிற்சிலாந்து - சர்வதேச தொழில் மாநாடு | 2010.06.02-2-010.06.18 |
| 05 | திரு.எஸ்.அமரதுங்க | ஆய்வு அலுவலர் | தாய்லாந்து - ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் கல்நார் மீதான விசேட முக்கியத்துவத்துடன் கைத்தொழில் இரசாயனப் பொருட்களை சிறந்த முறையில் முகாமை செய்வதன் மீது முகவர்களுக்கிடையில் விழிப்புணர்வை அதிகரிக்கும் பயிற்சிப்பட்டறை | 2010.08.30-2-010.09.04 |
| 06 | திருமதி.வி.பி.பீ.கே வீரசிங்க | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி | இந்தோனேசியா - அரச துறை சேவை விநியோகத்தில் புத்துருவாக்கம் மீது ஆய்வுக் கூட்டம் | 2010.10.31-2-010.11.06 |
| 07 | திருமதி.வி.பி.பீ.கே வீரசிங்க | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி | சீனா - சீனாவில் பெண்களின் இயலுமையை வளர்த்தல் மீதான கருத்தரங்கு | 2010.03.28-2-010.04.20 |
| 08 | திரு.ஆர்.ஜே. அபேசிறிவர்தன | தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் | கொரியா - தொழில் காப்புறுதி மற்றும் தொழில் ஊறு காப்பீடு மீதான உடந்தைப்பரிசில் பயிற்சி | 2010.10.09-2-010.10.17 |
| 09 | திரு.டிபீ.கே.ஆர். வீரகோன் | தொழில் ஆணையாளர் | தென் ஆபிரிக்கா - உலக சமூகப் பாதுகாப்பு அவை 2010 | 2010.11.27-2-010.12.06 |
| 10 | திரு.பீ.பீ.அபேசிங்க | விசேட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் | சுவிற்சிலாந்து - சர்வதேச தொழில் மாநாடு | 2010.05.31-2-010.06.19 |
| 11 | திரு.கே.டி.எம்.பிரிய-ந்த | பிரதித் தொழில் ஆணையாளர் | இந்தியா - முதுமானி மனித வள திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 2009.01.31-2-010.02.01 |
| 12 | திருமதி.என்சி. அமரசிங்க | மருத்துவ அலுவலர் | யப்பான் - உள ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித்திறன் மீது பல் நாட்டு அவதானிப்பசார் மற்றும் ஆய்வு செயற்பணி | 2010.01.17-2-010.01.23 |
| 13 | திரு.என்சந்திரஹாச-ன் | உதவித் தொழில் ஆணையாளர் | வியட்னாம் -"சிக்ஸ் சிக்மா கிறீன் பெல்ற்" மீதான பயிற்சி பாடநெறி | 2010.05.23-2-010.05.30 |
| 14 | திரு.எஸ்எம்.கே.எம். த சில்வா | உதவித் தொழில் ஆணையாளர் | இந்தியா - உலகப் பொருளாதாரத்தில் தொழில் மற்றும் தொழில்வாய்ப்புத் தொடர்புகள் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2010.11.07-2-010.11.27 |
| 15 | திரு.பீ.டபிள்யுஎம்.டி விக்கிரமசிங்க | உதவித் தொழில் ஆணையாளர் | தாய்வான் - உலகப் பொருளாதாரத்தில் வர்த்தக அபிவிருத்தி தொடர்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் | 2010.11.22-2-010.11.27 |
| 16 | திரு.பி.வசந்தன் | உதவித் தொழில் ஆணையாளர் | கொரியா - தொழில் காப்புறுதி மற்றும் தொழில் ஊறு காப்பீடு மீதான உடந்தைப்பரிசில் பயிற்சி | 2010.10.09-2-010.10.17 |

நிர்வாகப் பிரிவு